வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 48/2021

வழக்கு சாட்சி LW2/PW2

| பெயர் | அசோக்குமார் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | ஜெயராமன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 30 |

தேதி 20.11.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர் இல்லை. மனுதாரர் தரப்பு 355 BNSS பிரிவின் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கொளத்தூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன். 09.09.2020 காலை புதுவீட்டில் இருந்த டீவியை காணவில்லை. பழைய வீட்டில் இருந்து வந்து பார்த்த போது காணவில்லை. காவல் நிலையத்தில் எனது அண்ணன் புகார் அளித்தார். போலீசார் விசாரணைச் செய்தார்கள். 22.09.2020 அன்று காவல் நிலையத்தில் அழைத்து டீவி கிடைத்துவிட்டதாக கூறினார்கள். அண்ணனும் அ.சா.3 ம் காவல் நிலையம் சென்றார்கள். காவல் நிலையத்தில் சுகுமார் என்பவர் திருடியதாக கூறியதாக கூறினார்கள்.

**குறுக்கு விசாரணை**

சந்தேகத்தின் பேரில் தான் எனது அண்ணன் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் ஆமாம். எதிரி திருடியதாக காவல் நிலையத்தில் கூறியதால் தான் தெரியும் என்றால் ஆமாம். நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். புகார்தாரர் எனது அண்ணன்

என்பதாலும், போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். நான் பொய்யாக எனது அண்ணனுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.